සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I) (2018)

Efficiency Bar Examination for Officers in Grade III of Sri Lanka Technological Service - 2017 (I) (2018)

## (01) தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்

Establishments Code and Procedural Rules of the Public Service Commission

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) இணைந்த படிகள்

(ii) மேலதிக நேரக் கொடுப்பனவை செலுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள்

(iii) வைத்திய காரணங்களால் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்ட நபரொருவரை மீளவும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இருக்க வேண்டிய தேவைப்பாடுகள்

(iv) சேவையின் தேவையை நிறைவேற்ற வழங்கப்படுகின்ற இடமாற்றங்கள்

(v) சேவைப் பிரமாணக்குறிப்புகளும் ஆட்சேர்ப்புத் திட்டமும்

*(04 × 5 = 20 புள்ளிகள்)*

**2.** (i) 'தகுதி கூர்நிலை காலம்' என்றால் என்னவென சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) தகுதி கூர்நிலை காலம் நீடிக்கப்பட்ட ஒரு அலுவலர் தொடர்பாக, நீடிக்கப்பட்ட தகுதி கூர்நிலை கால முடிவின்போது திணைக்களத் தலைவரினால் கடைப்பிடிக்க வேண்டிய செயன்முறைகளை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

**3.** (i) அலுவலர்கள் இரண்டுபேர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் ஒன்றாக பரஸ்பர விருப்பு இடமாற்றத்துக்காக விண்ணப்பமொன்றை முன்வைத்தவிடத்து அதிகாரியினால் விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடுகள் யாவை? *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தனது பதவியிலிருந்து கேட்டு விலகலின்போது எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**4.** (i) பதில் லீவினை அனுமதிக்கும்போது திணைக்களத் தலைவரின் பொறுப்புகள் பற்றி ஆராய்க. *(10 புள்ளிகள்)*

(ii) ஓய்வுக்கு முன்னரான லீவைப் பெற்றுக்கொள்வதற்கென இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளை குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**5.** (i) பதவியொன்றின் பதில் கடமைக்காக அரசாங்க அலுவலர் ஒருவரை நியமிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை எனக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) 'கடமைகளைக் கவனித்துக் கொள்வதற்காக நியமனம் செய்தல்' என்றால் என்னவென சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**6.** (i) புகையிரத ஆணைப்பத்திரமொன்றில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டிய விடயங்கள் எவையென்பதைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) புகையிரத ஆணைப்பத்திரமொன்றுக்கும் புகையிரத அனுமதிச்சீட்டுக்குமிடையிலான வேறுபாடு யாதென விளக்குக. *(10 புள்ளிகள்)*

**7.** (i) அரசாங்க அலுவலர் ஒருவர் அரசாங்க வேலையிலிருந்து நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வேறு பதவியொன்றுக்கு விடுவிப்பு கோரி முன்வைத்த விண்ணப்பமொன்று நியமிக்கும் அதிகாரியினால் **ஏற்கப்படக்கூடாத** சந்தர்ப்பங்கள் எவை என்பதை குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்க சேவைக்கு அப்பாற்பட்ட பதவியொன்றுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலர் ஒருவரின் விடுவிப்பு முடிவுறும் சந்தர்ப்பங்கள் எவை எனத் தெளிவுபடுத்துக. *(10 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான
வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I) (2018)

Efficiency Bar Examination for Officers in Grade III of Sri Lanka
Technological Service - 2017 (I) (2018)

**(02) நிதி ஒழுங்கு விதிகள்**
Financial Regulations

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

**1.** (i) ஆண்டு செலவின மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் மூலதன செலவு விடயங்களின் பொருளியல் வகுதிகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) அரசாங்க அமைச்சு ஒன்றின் திட்டமிடல் பிரிவின் தொழிற்பாடுகள், **ஏழினை** சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

**2.** (i) மதிப்பிடும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாகவிருக்கும் **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்க நிதியின் மேல் திறைசேரியின் கட்டுப்பாடும் மற்றும் மேற்பார்வை தொடர்பாக உள்ளடக்கப்பட்டுள்ள **ஐந்து** தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**3.** (i) திரட்டு நிதியிலிருந்து பணத்தினை வழங்குவதற்கு ஜனாதிபதியினால் அதிகாரமளிக்கக்கூடிய **இரண்டு** சந்தர்ப்பங்களை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) 'விஷேட சட்ட சேவைகள் செலவினம்' எவை என்பதனை உதாரணங்களுடன் விளக்குக. *(10 புள்ளிகள்)*

**4.** (i) நி.பி. 137 இன் படி, கொடுப்பனவுகளை அங்கீகாரமளிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அவரின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாகவிருக்கும் **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) நி.பி. 141 (3) இன் படி, காசோலை ஒன்றின் இரண்டாம் கையொப்பமிடுபவர் அவரின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாகவிருக்கும் **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**5.** அரசாங்க நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வையில் கணக்காளர் ஒருவரின் வகிபாகத்தினை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** (i) அரசாங்கத் திணைக்களமொன்றின் நிதி நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ளக கணக்காய்வின் **ஐந்து** தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) புதிய கருத்திட்டங்கள் தொடர்பாக தொடக்கநிலை அங்கீகாரம் பெறுவதற்கு முன்னராக **செயற்படுத்தக்கூடாத** முயற்சிகளை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**7.** பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சிறுகுறிப்பு எழுதுக.

(i) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

(ii) எதிர்பாராத செலவு நிதியம்

(iii) நிதி அதிகார கையளிப்பு

(iv) வழங்கல் சேவைகளின் செலவினம்

*(05 × 4 = 20 புள்ளிகள்)*

* * *